**வன்செயலால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் துரித செயற்திட்டம் - கூறு "பீ" இன்**

## 1. அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும், இவ்வறிக்கையின் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களால் உருவாகும் சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிர,

(அ) செயற்திட்டமானது 2012 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான முறையான கணக்கீட்டுப் பதிவேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களின் அடிப்படையில் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) 2012 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான கட்டுநிதி நிதியக் கணக்கிலிருந்து மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்களும் அதற்கான மீள் நிரப்புகைகளும் செயற்திட்டத்தால் பேணப்படும் புத்தகங்களிலும் பதிவேடுகளிலும் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிக் கொணரப்பட்டுள்ளன என்றும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதியானது அத்தினத்தில் உள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக கணக்கிணக்கஞ் செய்யப்பட்டுள்ளது என்றும்

(ஈ) சமர்ப்பிக்கப்பட்ட செலவுக் கூற்றுக்களானவை (எஸ்ஓஈ) கடன் உடன்படிக்கையில் விதந்துரைக்கப்பட்ட வேண்டுதல்களுக்கு இணங்க மீளளிப்புக்களுக்கான விண்ணப்பங்களின் மீது நியாயமாக நம்பிக்கை கொள்ள முடியும் என்றும்

(உ) எனது கடந்த ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களைச் சீராக்குவதற்கு முகாமைத்துவத்தினால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளனவா என்றும்,

- கடன் மற்றும் மானிய உடன்படிக்கையில் விதந்துரைக்கப்பட்ட நிதியளிப்புக் கட்டுப்பாடுக்கு இணங்கப்பட்டுள்ளனவா என்றும் நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 நிதிசார் செயலாற்றல்

கணக்காய்விற்குக் கிடைக்கப்பெற்ற நிதிக்கூற்றுக்கள் மற்றும் தகவல்களின் பிரகாரம், 2012 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான செலவினம் ரூபா 1,119,279,544 ஐ இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான செலவினம் 252,461,586 வுடன் ஒப்பிடப்பட்டதுடன் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் ரூபா 1,372,576,555 ஆகும். மீளாய்வாண்டிற்கான செலவினம், முன்னைய ஆண்டிற்கான செலவினம் மற்றும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவறாான திரண்ட செலவினம் என்பவற்றின் பொழிப்பொன்றை பின்வரும் கூற்று காட்டுகின்றது.

| **விபரம்** | **திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான செலவினம்** | | **2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம்** |
|---|---|---|---|
| | **2012** | **2011** | |
| | -------- | --------- | -------------- |
| சிவில் வேலைகள்- நீர் வளங்கள் சபை – கடன் | 233,427,326 | 76,651,454 | 310,078,780 |
| நீர் வளங்கள் சபை – மானியம் | 178,185,515 | - | 178,185,515 |
| இலங்கை மின்சார சபை | 663,592,082 | 139,171,453 | 802,763,534 |
| ஆலோசனை - நீர் வளங்கள் சபை | 1,247,914 | 5,038,962 | 6,286,877 |
| அதிகரித்துச் செல்லும் செயற்பாட்டுக் கிரயம் - நீர் வளங்கள் சபை | 13,258,635 | 4,198,351 | 17,673,071 |
| பீசீகியூஏயூ * | 16,138,361 | 12,520,504 | 29,346,067 |
| உபகரணம் - பீசீகியூஏயூ | 2,985,669 | 1,947,387 | 4,865,193 |
| நிதிக் கட்டணங்கள் கடப்பாட்டுக் கட்டணங்கள் | 5,262,084 | 12,001,715 | 17,263,800 |
| வட்டி | 5,181,958 | 931,760 | 6,113,718 |
| | ------------------ | ----------------- | ----------------- |
| **மொத்தம்** | **1,119,279,544** | **252,461,586** | **1,372,576,555** |
| | ========== | ========== | ========== |

## 2.2 கட்டுநிதி நிதியக் கணக்கு

நிதிக்கூற்றுக்கள் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின் பிரகாரம் 2012 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான முதலாவது தோற்றுவிப்பு நிதியக் கணக்கிற்கான (கடன் மற்றும் மானியம்) செயற்பாடுகள் பொழிப்பு கீழே தரப்பட்டுள்ளது.

| | கடன் | | மானியம் | |
|---|---|---|---|---|
| | ஐ.அமெரிக்க டொலர் | ரூபா | ஐ.அமெரிக்க டொலர் | ரூபா |
| 2012 சனவரி 01 இல் உள்ளவாறான மீதி | 519,824 | 59,208,665 | 150,000 | 17,085,195 |
| கூட்டுக | | | | |
| மீள் நிரப்புகைகள் | 269,592 | 34,535,016 | - | - |
| அந்நிய செலாவணி இலாபம் | - | 7,311,759 | - | 1,968,555 |
| | 789,416 | 101,055,440 | 150,000 | 19,053,750 |
| கழி : | | | | |
| பற்றுதல்கள் - பீசீகியூஏயூ | 142,453 | 18,460,229 | - | - |
| நீர் வளங்கள் சபை | 151,227 | 19,557,198 | 128,867 | 16,366,460 |
| | 495,736 | 63,038,012 | - | - |
| வங்கிக் கட்டணங்கள் | 37 | 4,484 | - | - |
| 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி | 495,699 | 63,033,528 | 21,133 | 2,687,290 |

## 3. கணக்காய்வு அவதானிப்புகள்

### 3.1 மீளளிப்பு நிதிகள்

வங்கியால் பின்வரும் காரணங்களுக்காக ரூபா 754,566 (யூ.எஸ்.டொலர் 6,638.89) பெறுமதியான இரு மீளளிப்பு விண்ணப்பங்கள் இடைநிறுத்தப்பட்டிருந்தன.

- அங்கீகரிக்கப்படாத அலுவலக உபகரணக் கொள்வனவு
- இரட்டைக் கோரல்

## 3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) நீர் வழங்கல் சபையால் மேற்கொள்ளப்பட்ட எச்சலம்புத்து நீர் வழங்கல் திட்டத்தின் விநியோக வேலைகள் மற்றும் பிரதான பரிமாற்றற் கோபுரத்திற்காக ஒப்பந்தக்காரருக்குச் செலுத்தப்பட வேண்டியிருந்து இடைக்கால ஒப்பந்தத் தொகையான ரூபா 541,643 தொகை அட்டுறு செலவினமாகக் கணக்குகளில் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக, சிவில் வேலைகளினதும் நடைபெறும் வேலைகளினதும் பெறுமதி இதே தொகையால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) நிதிப் பிரமாணம் இல. 133 இன் பிரகாரம் ‘‘பீ‘‘ கூறின் கொடுக்கல் வாங்கல்கள் மீது உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) நிதிப் பிரமாணம் இல. 756 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட அலுவலக உபகரணங்கள் தொடர்பாக வருடாந்த பௌதீக மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3.3 செயற்திட்ட நிர்வாக கைநூலுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

(அ) செயற்திட்ட நிர்வாகக் கைநூலின் 15 ஆம் பந்தியின் பிரகாரம் மாதாந்தம் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செயலாளரின் தலைமையில் ஓர் தேசிய வழிகாட்டல் குழு (என்எஸ்சீ) கூட்டப்பட வேண்டும். எவ்வாறெனினும், மீளாய்வாண்டின் போது எவ்வித என்எஸ்சீ கூட்டங்களும் கூட்டப்பட்டிருக்கவில்லை. ஆகவே செயற்திட்ட நிர்வாகக் கைநூல் அறிவுறுத்தல்களின் படி கூறின் ஒட்டுமொத்த முன்னேற்றத்தை மீளாய்வதற்கும் கொள்கை அம்சங்கள் தொடர்பாக அமுலாக்கல் முகவர்களுக்கு போதியளவு வழிகாட்டலை வழங்கவும் குழுவால் இயலாதிருந்தது.

(ஆ) செயற்திட்ட நிர்வாகக் கைநூலின் 115 ஆம் பந்தியின் பிரகாரம், கேள்வி நடைமுறைகள் கேள்வி மனுதாரர்களும் ஒப்பந்தங்களை வழங்கலும் செயற்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட நிதிகளின் பயன்பாடு பௌதீக என்பன உள்ளடங்கலாக இச் செயற்திட்டத்திற்காக ஓர் இணையதளத்தை அமைச்சு

அர்ப்பணித்திருந்த வேண்டும். எனினும், 2013 ஏப்ரல் 30 வரையிலும் அத்தகைய இணையதளம் ஒன்று வடிவமைக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) செயற்திட்ட நிர்வாகக் கைநூலின் 11 ஆம் பந்தியின் பிரகாரம், மீளாய்வுக் குழுக்கள் ஒரு வருடத்திற்கு இரண்டு தடவைகளேனும் நடாத்தப்பட வேண்டும். ஒரு மீளாய்வுக் குழு அறிக்கையே கணக்காய்வு நோக்கத்திற்காக கிடைக்கப்பெற்றிருந்தது. இதற்கு மேலதிகமாக இணைப்புகளுடனான தலைவருக்கான அறிக்கையும் பரிந்துரைகளும், காலாண்டு செயற்திட்ட செயலாற்றல் அறிக்கைகள், செயற்திட்ட தகவல் ஆவணங்கள் மற்றும் காலாண்டு முன்னேற்ற அறிக்கைகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை.

- **நிதிகளின் பயன்பாடு**

-----------------------------

செயற்திட்டத்தின் கூறு ‘‘பீ’’ இன் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக பின்வரும் வகுதிகளின் கீழ் கடன்களாகவும் மானியமாகவும் முறையே ரூபா 5,212.3 மில்லியன் தொகையும் ரூபா 190.74 மில்லியன் தொகையும் (அண்ணளவாக) பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்த போதிலும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஏற்பட்ட உள்ளபடியான செலவினம் முறையே ரூபா 1,194.39 மில்லியன் தொகையாகவும் ரூபா 178.19 மில்லியன் தொகையாகவும் அல்லது கிடைக்கப்பெற்ற நிதிகள் முறையே 22.9 சதவீதமாகவும் 93.4 சதவீதமாகவும் கீழே காண்பிக்கப்பட்டவாறு இருந்தது.

| விபரம் | மதிப்பிடப்பட்ட செலவினம் | | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலவினம் 2012.12.31 | மொத்த ஏற்பாட்டின் சதவீதமாக திரண்ட செலவினம் |
|---|---|---|---|---|
| | யூஎஸ் டொலர் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | % |
| முதலீட்டுக் கிரயம் | | | | |
| சிவில் வேலைகள் | 30.07 | 3823.70 | 1,112.84 | 29.1 |
| உபகரணம் மற்றும் தளபாடம் | 1.68 | 213.63 | 4.86 | 2.3 |
| ஆலோசனையாளர் வடிவமைப்பு மற்றும் மேற்பார்வை | 0.3 | 38.15 | 6.29 | 16.5 |
| மீண்டெழும் கிரயம் | | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| அதிகரித்துச் செல்லல் | 0.3 | 38.15 | 17.67 | 46.3 |
| செயற்திட்ட முகாமைத்தும் - பீசீகியூஏயூ | 1.37 | 174.21 | 29.35 | 16.85 |
| பௌதீக மற்றும் விலை நிகழத்தக்கவைகள் | 6.29 | 799.84 | - | - |
| | | --------------- | ---------------- | --------------- |
| உப மொத்தம் | | 4,599.28 | 1,171.01 | 25.5 |
| நிதிக் கட்டணங்கள் (கடப்பாட்டு கட்டணங்களும் வட்டியும்) | 0.98 | 124.62 | 23.38 | 18.8 |
| | | --------------- | ----------------- | |
| உப மொத்தம் | | 5,212.30 | 1,194.39 | 22.9 |
| சிவில் வேலைகள் - மானியம் | 1.5 | 190.74 | 178.19 | 93.4 |
| | | --------------- | ----------------- | |
| கூட்டு மொத்தம் | 42.49 | 5,403.04 | 1,372.58 | 25.4 |
| | | ========= | ========== | ===== |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

- கடன் உடன்படிக்கையின் படி, செயற்திட்டத்தின் கூறு ‘‘பீ’’ 2013 யூன் 30 அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. எவ்வாறெனினும், 2012 இன் இறுதியில் உள்ளவாறு ‘‘பீ’’ கூறு அங்கீகரிக்கப்பட்ட மொத்த ஒதுக்கீட்டில் 25.4 சதவீதத்தை மாத்திரமே பயன்படுத்தியிருந்தது. குறித்த கால எல்லைக்குள் செயற்திட்ட கூறு ‘‘பீ’’ ஐ நிறைவேற்றுவது தொடர்பில் ஆபத்து உள்ளமை தெரியவந்தது.

(ஆ) சிவில் வேலைகளுக்காக ரூபா 3,823.7 மில்லியன் தொகை ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் ரூபா 1,112.84 மில்லியன் அல்லது மொத்த ஏற்பாட்டின் 29.1 சதவீதம் மாத்திரமே குறித்த நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், செயற்திட்ட நிர்வாகக் கைநூலின் ஒட்டுமொத்த செயற்திட்ட அமுலாக்கற் திட்டத்தின் பீ அட்டவணையின் 12 ஆம் பந்தியின் படி சக்தி மற்றும் நீர் வழங்கல் நடவடிக்கைகளின் ஒட்டு மொத்தப் பணிகளும் 2013 மார்ச் மாத இறுதியளவில் பூர்த்தியடைந்திருக்க வேண்டும்.

(இ) கடன் உடன்படிக்கையின் 3.02 ஆம் பிரிவின் படி, அளிப்புச் செய்யப்பட்ட மற்றும் அளிப்புச்செய்யப்படாத கடன் தொகையில் முறையே வட்டியையும் 0.15% ஆன கடப்பாட்டு கட்டணங்களையும் கடன் பெறுனர் செலுத்த வேண்டும். அமுலாக்கல்

திட்டத்தின் படி செயற்திட்டம் செயற்படுத்தப்பட்டிருந்தால் செலுத்தப்பட்ட தொகையைப் பார்க்கிலும் கடப்பாட்டுக் கட்டணங்களின் கொடுப்பனவு குறைவடைந்திருக்கலாம். எவ்வாறெனினும், செயற்திட்டத்தின் கூறு ‘‘பீ’’ இன் குறைவான செயலாற்றல் காரணமாக செயற்திட்டம் சார்பாக கடன் கணக்கில் இருந்து கடப்பாட்டுக் கட்டணமாகவும் வட்டியாகவும் முறையே ரூபா 5,181,958 தொகையினையும் ரூபா 5,262,085 தொகையினையும் ஆசிய அபிவிருத்தி வங்கி மீளப் பெற்றிருந்தது.

**3.5** 2007 ஏப்ரல் 05 ஆம் திகதிய 33 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் 2.2.9 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டவாறு செயற்திட்டப் பதவியணிக்குத் தேவையான கல்வி மற்றும் தொழில்சார் தகமைகளும் அனுபவமும் ஆளுமையும் இருத்தல் வேண்டும். எவ்வாறெனினும், அத் தகமைகளையும் அனுபவத்தையும் கொண்டிராத உதவிப் பொறியியலாளர் ஒருவர் ஆட்சேர்க்கப்பட்டு வேலையில் ஈடுபடுத்தப்பட்ட காலத்திற்காக அவருக்கு ரூபா 892,475 கூட்டுமொத்தத் தொகை மாதாந்த படிப்பணமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

**3.6** குறித்த செயற்திட்டக் காலப்பகுதிக்குள் செயற்திட்ட குறிக்கோள்கள் எய்தப்பட்டமையை உறுதிப்படுத்துவதற்காக செயற்திட்டத்தின் ஒட்டுமொத்தக் காலப்பகுதியை உள்ளடக்கும் வகையில் பொறுப்புகளைக் குறிப்பிட்டு நிதி மற்றும் பௌதீக இலக்குகளை மாதாந்த மற்றும் காலாண்டு ரீதியாக எடுத்துக்காட்டும் வகையிலான ஒட்டுமொத்த விரிவான செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். எவ்வாறெனினும், செயற்திட்ட ஒருங்கிணைப்பு மற்றும் தர உத்தவரவாதம் பிரிவால் இத்தகைய ஓர் திட்டம் தயாரிக்கப்பட்டு அமுலாக்கப்பட்டிருக்கவில்லை.